<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | CC No. 627/2017 | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for Prosecution | : | L.W2 | P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவலிங்கம் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ராஜ் நாடார் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.02.2026.

**<u>எதிரி ஆஜரின்மைக்காக மனு அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் உடுமலைப்பேட்டை பூலாங்கிணறில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பதநமாக நான் எதையும் நேரில் பார்க்கவில்லை. யார் யார் கிடையில் என்ன பிரச்சனை ஏற்பட்டது என்றும், யார் யாரை அடித்தார்கள் என்றும், எதற்காக அடித்தார்கள் என்றும் எதுவும் தெரியாது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. முத்துகிருஷ்ணன் எனக்கு தெரியும். அவர் உள்ளூர்காரர். அவர் எனக்கு நண்பர் ஆவார். அவர் கடந்த 1 வருடத்திற்கு முன்பாக இறந்து விட்டார். அவருக்கு ஏற்பட்ட பிரச்சனை குறித்து நான் நேரில் பார்க்கவில்லை. அது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 11.02.2014 ம் தேதியன்று இ ரவு 10.00 மணியளவில் நான் சின்ன பூலாங்கிணறுக்கு சென்று விட்டு நண்பர் முத்துகிருஷ்ணன் என்பவருடன் முக்கோணம் அருகில் சென்று டிபன் சாப்பிட வந்தோம் என்றும், அப்போது ஆஜர் எதிரி பாலு (எ) சுப்பிரமணியன் என்பவர் அருகில் இருந்த கோழிக் கடை கோழிக்கறி கேட்டு தகராறு செய்தார் என்றும், என்ன என்று போய் பார்த்த போது முத்துகிருஷ்ணன் என்பவரை பாலசுப்பிரமணி மற்றும் வெங்கடேஷ் ஆகியோர் தகாத வார்த்தையால் திட்டி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் கோழிக்கறி வெட்டும கத்தியை எடுத்து முத்துகிருஷணன் என்பவரின் கை கால்களிலும் தலையிலும் வெட்டினார்கள் என்றும், அவரை நாஙகள் உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம் என்றும முத்துகிருஷ்ணன் கொடுத்த புகாரின்பேரில் போலிசார் என்னை விசாரித்த போது சம்பவத்தை நான் நேரில் பார்த்தததாக விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் ஆஜர் எதிரிகள் பாலசுப்பிரமணியன் மற்றும் வெங்கடேஷ் என்பவர்கள் உள்ளூர்காரர்கள் என்பதாலும் அவர்களுடன் சமாதானம் ஆகிவிட்டபடியாலும் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.